## மதுரவாயல் – துறைமுகம் மேலடுக்கு சாலைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயரை சூட்டுக!

# ரூ.290.93 கோடியில் பாதாள சாக்கடை திட்டப் பணியை அமைத்துக் கொடுத்த முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் மதுரவாயல் தொகுதி உறுப்பினர் – காரம்பாக்கம் க.கணபதி பேச்சு!

**சென்னை, ஏப்.11-**

**சட்டப்பேரவையில் வீட்டு வசதி வாரியத் துறை மானியக் கோரிக்கையில் மதுரவாயல் தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பேசுகையில், மதுரவாயல் – துறைமுகம் மேலடுக்கு சாலைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரை சூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப் பேரவையில் வீட்டு வசதித் துறை மானியத்தில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி பேசியதாவது:-

புத்துலகத்தின் தீர்க்கதரிசி, ஈரோட்டுத் தந்தை பெரியார் அவர்களையும், பல்துறை அறிவு, பல்துறை ஆற்றல், பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களையும், வங்கக் கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் சிற்பி, தமிழ் மொழியை பாதுகாத்த பெருமகன், தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை பெற்றுத் தந்த தலைமகன், நம்மையெல்லாம் ஆளாக்கிய முத்மிழறிஞர் கலைஞர் அவர்களையும் நான் முதற்கண் வணங்குகிறேன்.

இந்தியாவிலேயே இப்படி ஓர் ஆட்சியா! என்று அனைவரும் ஆச்சரியத்துடன் அன்னாந்து பார்க்கும் வகையில் குழந்தை முதல் பெரியவர் வரை, அனைத்து தரப்பினருக்கும், அவர்களின் தேவைகளை அறிந்து, அவர்கள் கேட்பதற்கு முன்பே, ஓடோடிச் சென்று உதவிகள், திட்டங்களைத் தீட்டி சிறார்களின் பசிப் பிணியைப் போக்கிய எங்கள் தாயுமானவர் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு தோளோடு தோள் நின்று, இந்த ஆட்சியை இன்றைக்கு சிறப்பான முறையிலே முன்னெடுத்து செல்கிற எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழும், துணை முதல்வர், எங்கள் சின்னவர் அவர்களையும் நான் வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையை இந்தியாவிலேயே சிறந்த துறையாக ஐ.நா. விருது பெறும் அளவிற்கு தலைவரின் வழி நின்று சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கும் எங்கள் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும், அன்பிற்கு இனிய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும், நான் முதற்கண் என்னுடைய வணக்கத்தை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்து வெற்றிப்பெற செய்து, இந்த மன்றத்திற்கு அனுப்பிய மதுரவாயல் தொகுதி சட்டமன்ற வாக்களப்பெருமக்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய இதயமார்ந் நன்றியைத் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அனைவருக்கும் வீடு!

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியத்தின் மீது நான் இன்று பேசவிருக்கிறேன். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அனைவருக்கும் வீடு வழங்க வேண்டும் என்ற இலக்குடன் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சியானது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அனைவருக்கும் வீடு என்ற இலக்கினை தனது தலையாயக் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

ஏழை எளியவர்கள் என்று சொல்லக்கூடிய குறைந்த வருவாய் பிரிவினர், மத்திய வருவாய் பிரிவினர், உயர் வருவாய் பிரிவினர் என்ற வகையில் மூன்று வகையாக பிரித்து, இம்மூன்று பிரிவினரின் இல்லக் கனவையும் நிறைவேற்றி வருவது தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் துறையே ஆகும். நகரப் பகுதிகளில் அடர்த்தியாக அதிக அளவில் மக்கள் வசித்து வருவதால் மிக அதிக நகரமயமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இப்படி நகர்ப் புறங்களை நாடி வரும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதியாக வீடுகளை அமைத்துத் தரவேண்டிய சூழ்நிலை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு இன்றைக்கு இருந்துக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையானது கிராமம் முதல் நகரம் வரை பல்வேறு நிலைகளில் துறை சார்ந்த, இடம் சார்ந்த மற்றும் பொருளாதார இலக்குகளை ஒருங்கிணைத்து உறுதியான செயல்பாட்டின்மூலம் 12 மண்டலங்களை கொண்ட எல்லைகளை வீட்டு வசதி வாரியம் வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு அடுக்கு மாடி குடியிருப்புகளைக் கட்டி நியாயமான குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. அதில் ஒரு அங்கமாக சுயநிதி திட்டம் என்ற பெயரில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி விற்பனை செய்து வருகிறது. இதன் மற்றொரு பங்களிப்பாக அரசு ஊழியர்களுக்கான வாடகை குடியிருப்புகளையும் கட்டி அதில் அரசு அலுவலர்களை, ஊழியர்களை குடியமர்த்தி பெருமை கொள்கிறது.

### முதல்வர் திறந்து வைத்த குடியிருப்புகள்!

நமது முதல்வர் அவர்கள் கடந்த 22.7.2024 அன்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 4,184 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை அன்றைக்கு திறந்து வைத்து நாட்டிற்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். மேலும், தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டத்தின்கீழ் சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 344 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1,387 அடுக்குமாடி குடியிருப்புகள் இன்றைக்கு கட்டப்பட்டு தலைவர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

அதேபோன்று வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சொல்லிக் கொண்டே போகலாம். இன்றைக்கு பல இலட்சம் குடியிருப்புகள் நம்முடைய ஆட்சியில், முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலில், அந்தத் துறையானது அமைச்சர் முத்துசாமி அவர்களின் சிறப்பான முன்னெடுப்பை இன்றைக்கு எடுத்துச் செல்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, தமிழக மக்களின் குறைகளை, மக்களிடமே சென்று கண்டறிய தமிழ்நாடு வீட்டு வசதித் துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்களை எல்லாம் ஒருங்கிணைத்து அனைத்து நகர நலச் சங்கங்களின் தலைவர்கள் அவர்களை எல்லாம் அழைத்து எனது மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பொது மக்களை எல்லாம் சந்தித்து, கட்டடம் மற்றும் நில அனுமதி வாங்குவதற்கு தமிழக வீட்டு வசதித் துறையிடமிருந்து NOC பெறுவது தொடர்பான சிக்கல்களை களைய வேண்டுமென்ற பல்வேறு கோரிக்கைகளை கடந்த காலத்தில் முன்னெடுத்ததை, அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஆலோசிக்க முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், அமைச்சர் அவர்கள் ஐந்து முறை என்னுடைய தொகுதிக்கு வந்து, மக்களையெல்லாம் நேரடியாக சந்தித்து, அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டு, அதற்காக ஒரு தீர்வு தருகிற இடத்தில் இன்றைக்கு முன்னெடுப்பு செய்திருக்கிறார்கள்.



அதேபோன்று, நமது அன்புத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், *Chennai Urban Agglomerationunder the Innocent Buyer scheme as per G.O. (M.S.) No. 565, Revenue Department, dated 26.9.2008* என ஓர் அரசாணை பிறப்பித்தார். அதன்படி *TNHB land acquisition* ஐவிட மிக சிரமமான *ceiling land*களை ஒரு *ground* நிலம், அதாவது 2,400 சதுர அடி மனைகளை, குறைந்த தோராய கட்டணமாக ரூ.55,000/ மட்டும் செலுத்தினால் போதும், *Innocent buyer* பெயருக்கு பட்டா வழங்கலாம் என்று நம்முடைய அன்புத் தலைவர் அய்யா கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆணை வழங்கப்பட்டது.

### நகர வளர்ச்சி 95 சதவிகிதம்!

அந்த அளவில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் வந்த நம்முடைய திராவிட மாடல் நாயகர் அவர்கள், இன்றைக்கு 95 சதவிகிதம் நகரம் வளர்ச்சியடைந்த பிறகு, தமிழக வீட்டு வசதித் துறையால் எந்தத் திட்டமும் நிறைவேற்ற முடியாத பல்வேறு நிலைகள் இருந்தாலும்கூட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்படாத நிலங்கள் மற்றும் பட்டா தங்களின் பெயரில் கொண்டுள்ள உரிமையாளர்கள் நிலங்களை, தமிழக வீட்டு வசதி வாரியத் துறை *Land acquisition list*ல் இருந்து *denotification* செய்து தமிழக வீட்டு வசதி வாரியத்தின் தடையில்லா சான்று வழங்கி மக்களுக்கு தீர்வு காண வழி வகை செய்யுமாறு இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாழ்விட மேம்பாட்டு வாரியம் பலதரப்பட்ட சாதனைகளை படைத்து வருகிறது. வாரிய இடங்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள்தான் அதிகமாக வசிக்கிறார்கள். கடந்த காலங்களில் குடிசை மாற்று வாரியம் வரைபடம் தயார் செய்து மனை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீடு ஆணை மூலமாக மனையைப் பெற்றவர்கள் வறுமையின் காரணமாக இடத்தை விற்றுவிட்டார்கள். ஒவ்வொரு மனையும் நான்கு அல்லது ஐந்து கைகள் மாறியுள்ளது. தற்போது வழங்கப்பட்ட அரசாணையில் ஒதுக்கீடு ஆணை உள்ளவர்களுக்கு மட்டுமே கிரையப் பத்திரம் மற்றும் பட்டா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

ஆனால், இன்றைக்கு என்ன நிலை என்று பார்த்தால், 40 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கும் 80 சதவிகிதம் பேருக்கு இந்த ஆணையின்மூலம் கிரையப் பத்திரம் மற்றும் பட்டா கிடைக்காது என்று தெரிகிறது. மேலும், ஒதுக்கீடு தந்தை பெயரில் இருக்கும்பட்சத்தில், தந்தை இறந்து போய்விட்டார் என்றால், அந்த மகனுக்குகூட இது கிடைக்காது என்ற நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கருணை பார்வையால் தற்போது மனையில் யார் குடியிருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் பட்டா கிடைக்க உரிய ஆணை வழங்கும்படி கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பணிகள், நம் திராவிட மாடல் ஆட்சியில், திராவிட நாயகர் அவர்களுடைய சீரிய முறையில் பல பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்11, வார்டு150, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அருகில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நிதி மூலமாக அமைச்சர் அவர்களின் சீரிய வழிக்காட்டுதலில் ரூ.15.75 கோடி மதிப்பீட்டில் விவசாய விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரில் ஈர நில பசுமை பூங்கா அமைக்கப்பட்டு முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

என்னுடைய சிறிய கோரிக்கை, இன்றைக்கு அந்த பசுமை பூங்கா என்பது அனைத்து தொகுதி மக்கள் மட்டுமல்ல, சுற்றுவட்டாரத்தில் இருக்கிற பெரும்பாலான மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து இன்றைக்கு அதை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எழிலார்ந்த பூங்காவை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்.

ஒரு முறை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து நேரம் கிடைத்தால் அந்தப் பூங்காவை பார்க்க வேண்டுமென்று அன்பு வேண்டுகோள் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்கெல்லாம் மேலாக கூவம் ஆற்றின் குறுக்கே, கடந்த மழைக் காலங்களிலே, நம்முடைய ஆட்சி வந்தவுடன் முதல் மழை பெய்தது, முதல் கொரோனா, இரண்டாவது மழை பெய்தது. அந்த மழைக் காலத்தில் அந்த இடத்தில் மூன்று பேர் அடித்துச் செல்லப்பட்டார்கள். என்ன காரணம் என்று சொன்னால் தரைப்பாலம் இருந்தது, அங்கு தரைப்பாலம் இருந்த காரணத்தால் அது அடித்து செல்லப்பட்ட காரணத்தால், ஒரு கோரிக்கை வைக்கப்பட்டு, இன்றைக்கு அந்த இடத்தில் ஏறக்குறைய ரூ.160 கோடி செலவில் இரண்டு மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாக ரூ.13 கோடி செலவில் பெரிய அரங்கம் கட்டப்பட்டு வருகிறது. துணை முதலமைச்சர் அவர்கள் துறை சார்ந்த அறிவிப்பில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் *Mini stadium* அமைக்க ரூ.3 கோடி நிதி அறிவித்திருக்கிறார்கள். அவருக்கு தொகுதி மக்களின் சார்பிலே இந்த நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

### மெட்ரோ இரயில் திட்டப் பணிகள்!

மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் போரூரிலிருந்து ஆற்காடு சாலை முழுவதுமாக ஏறக்குறைய 900 கோடி ரூபாய் செலவிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. டிசம்பர் மாதத்தில் முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் அந்தப் பணிகள் துவங்கப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### வானகரம் காவல் நிலையம்!

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற மதுரவாயல் காவல் நிலையத்திலிருந்து தனியாக பிரித்து, வானகரம் காவல் நிலையம் வேண்டுமென்று கடந்த காலத்திலே கோரிக்கை வைக்கப்பட்டது. அது இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு, தனியாக வாடகைக் கட்டடத்தில் காவல் நிலையத்தை பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவற்றிற்கெல்லாம் மேலாக, வளசரவாக்கம் பகுதியிலே இருக்கிற போரூர், நொளம்பூர், காரம்பாக்கம், நெற்குன்றம், இராமாபுரம் ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், நம்முடைய ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்டு, 4 ஆண்டுகளில் ரூ.290.93 கோடி செலவில் 95 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு, வீட்டு இணைப்புகள் தருகின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சமுதாய நகர்நல மருத்துவமனை. மதுரவாயல் சட்டமன்ற தொகுதியில் சின்ன போரூர் பகுதியில் 151வது வார்டில் *accident zone* ஒன்று வேண்டுமென்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்களிடத்திலே நான் கோரிக்கை வைத்தேன். ரூ.5½ கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரவாயல் தொகுதி, வளசரவாக்கம், எஸ்.வி.எஸ். நகரில் 151வது வார்டில் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த 2½ ஏக்கர் நிலம் குளம் புறம்போக்கு இடம், அதை நாங்களெல்லாம் மீட்டெடுத்து, ஏறக்குறைய ரூ.5 கோடி செலவில் எழிலார்ந்த பூங்கா மற்றும் கரை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறப்புவாய்ந்த திட்டங்களைச் சொல்ல வேண்டுமென்றால், மழைநீர் வடிகால்வாய் மட்டும் ஏறக்குறைய ரூ.70 கோடி செலவிலும், சாலைப் பணிகள் ரூ.30 கோடி செலவிலும் ஏறக்குறைய ரூ.100 கோடி செலவில் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இராமாபுரம் பகுதியில் *CMDA fund*ல் ஏறக்குறைய 2 ஏக்கர் இடத்தில் சிறப்பு வாய்ந்த பசுமை பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன.

### பூங்காவுக்கு விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் பெயரை சூட்டுக!

ஒரே ஒரு கோரிக்கை என்னவென்றால், தேசத்தந்தை மகாத்மா காந்தியுடன் 29 முறை சிறை சென்றவர், நாடகக் கலை மூலமாக பல்வேறு நிலைகளிலே இந்த தேசத்தின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட விடுதலை போராட்ட வீரர், போராடிய தியாகி, வீர தியாகி எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் அவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே திருமங்கலத்தில் அடமானத்தில் இருந்த அவருடைய வீட்டை மீட்டெடுத்து அதை 27.12.1998 அன்று நினைவு இல்லமாக மாற்றித் தந்து அவரது புகழ் நாடறியும் வண்ணம் செய்துள்ளார் நம்முடைய அன்பு தலைவர் ஐயா கலைஞர் அவர்கள்.

நாட்டு விடுதலைக்காக போராடிய தியாகி எஸ்.எஸ். விஸ்வநாததாஸ் அவர்களின் பெயரை மதுரவாயல் தொகுதி, 155-வது வார்டு இராமாபுரத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 5 கோடியே 97 இலட்சம் செலவில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதியில் கட்டப்பட்டு வருகிற அந்த எழிலார்ந்த பூங்காவிற்கு அவருடைய பெயரை சூட்ட வேண்டுமென்று அந்த சமுதாய மக்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை அன்போடு நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரவாயல் சட்டமன்ற தொகுதியிலே மதுரவாயல் துறைமுகம் மேலடுக்கு விரைவு சாலை திட்டம் கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்திலே கொண்டு வரப்பட்டது. கடந்த முறை தோழமைக் கட்சியினுடைய தலைவர்களெல்லாம் வலியுறுத்தி பேசியிருக்கின்றார்கள். அந்தப் பணிகளை முடிக்கிறபோது, நானும், அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெயரிலே, மண்ணின் மைந்தன் என்ற முறையிலே எங்களுடைய தொகுதி மக்களுடைய கோரிக்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரை அந்த மதுரவாயல் துறைமுகம் மேலடுக்கு விரைவு சாலைக்கு பெயர் சூட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.) ஒரே ஒரு நிமிடம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 2006-2011 ஆட்சிக் காலத்தில் கிராம நத்த மனைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. அப்போது 3 சென்ட்டுக்கு குறையாமல் கொடுத்தோம். தற்போது அரசின் அறிவிப்பில், வருட வருமானம் 3 இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு 1 சென்ட் பட்டா இலவசமாகவும், 1 சென்ட் அரசின் மதிப்பீட்டின்படி பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்றும் உள்ளது. என்றைக்குமே தி.மு.க. ஆட்சி என்பது ஏழைகளுக்கான அரசு. மக்களுக்காக பணியாற்றி வருகின்ற முதலமைச்சர் அவர்கள் இதிலே நீங்கள் தயவுசெய்து நம்முடைய தலைவர் கொடுத்ததுபோல சென்னை மாநகராட்சியில் *belt area* ஆகக்கூட இருந்தாலும் பரவாயில்லை. 3 சென்ட் பட்டாவை இலவசமாக தரலாம் என்று என்னுடைய கோரிக்கையை இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீதம் இருக்கிற இடத்திற்கு பணத்தை வாங்கிக் கொண்டு கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். 3 சென்ட் இலவசமாக கொடுத்துவிட்டு, மீதம் எவ்வளவு வைத்திருந்தாலும், பணத்தைப் பெற்றுக் கொண்டு கொடுக்கலாம் என்ற அறிவிப்பை தயவு செய்து அறிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இது நன்றாக இருக்குமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைச் சொல்லி, 2026ல் திராவிட முன்னேற்றக் கழகம்தான் மீண்டும் ஆட்சியிலே அமரும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. இதை எந்தக் கொம்பனாலும் மாற்ற முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலை இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றி வருகிறது. தி.மு.கழகம் வெல்லும், தி.மு.கழகம் போராடும், தி.மு.கழகம் வெல்லும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். (மேசையைத் தட்டும் ஒலி)

### தொகுதிக் கோரிக்கைகள்

நான்கு வழிப் பாதையாக உள்ள ஆற்காடு சாலையை ஆறு வழிப் பாதையாக மாற்றி சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால்வாய் கட்டித் தர வேண்டும்.

மதுரவாயல் தொகுதியில் கடந்து செல்கின்ற கூவம் ஆற்றை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, இருபக்க கரைகளையும் உயர்த்தி, கான்கிரீட் பக்கவாட்டு சுவர் அமைத்து, கரை ஓரத்தில் சாலை மற்றும் பூங்கா அமைத்துத் தர வேண்டும். அயப்பாக்கம் ஊராட்சிக்கு தனி காவல் நிலையம் அமைக்க வேண்டும்.

இவ்வாறு காரம்பாக்கம் கணபதி உரையாற்றினார்.

---

## திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறியாளர் அணி

# ஒன்றிய, நகர பேரூர்க் கழக நிர்வாகிகள் நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஏப். 11 -

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

நெல்லை மாவட்டக் கழக செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் நாளை (12.04.2025 - சனிக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகம் (அம்பாசமுத்திரம் ரோடு ரிலையன்ஸ் பல்க் அருகில்)நடைபெறவுள்ளது.



இதில் பொறியாளர் அணிக்கு திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய/ நகர/ பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. பழனியப்பன்

### ஏப்ரல் 11 (1979)



திராவிட கழகத்தில் உறுப்பினராகி, கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, வளவனூர் குமாரக்குப்பம் பேரூர்க் கழக செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக 1953ல் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில், கல்லக்குடி ரயில் நிறுத்தும் போராட்டத்தில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு, ஆறுமாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**